2nd November 1962]

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினருடைய கேள்வியின் இரண்டாவது பிரிவுக்கான பதிலைக் கவனித்திருந்தாலே தெரிந்திருக்கும். திறந்து விடப்பட்ட தண்ணீர் கீழ் மட்டத்தில் பயன்படுத்தப்படுகிறது.

Fishermen (Nanguneri taluk)

* 1118 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any representation in person and in writing has been made to the Revenue Divisional Officer, Shermadevi and the Collector, Tirunelveli regarding famine conditions of the fishermen in the Coastal village of Nanguneri taluk, Tirunelveli district; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Panchayats

* 1119 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have taken any steps to ensure that pressures of party politics do not disrupt the activities and the constructive role of panchayats?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

திரு. வை. சங்கரன் : பஞ்சாயத்துத் தேர்தலில் ஈடுபடுகிறவர்கள் கட்சி சார்பில் நிற்காமல் சைக்கிள் சின்னம், குடைச் சின்னம் வைத்துக்கொண்டு நின்றாலும், ஓட்டுப் போடும்போது அந்தந்தக் கட்சி ஆதரவாளர்கள் வெளிப்படையாகக் கட்சி சார்பில் வேலை செய்யக்கூடிய நிலைமை இருப்பதால், இதைத் தடுக்க, அபேட்சகர்களிடம் 'ஒரு கட்சியின் ஆதரவைப் பெற மாட்டோம்' என்ற முறையில் ஒரு உறுதி மொழிப் பத்திரம் வாங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறெல்லாம் உறுதி மொழிப் பத்திரம் வாங்க உத்தேசமில்லை. அப்படிச் செய்வது முறையல்ல. ஆனால் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, பஞ்சாயத்துத் தேர்தலில் கட்சி ரீதியில் ஈடுபடுவதில்லையென்று முடிவு செய்து கொண்டால் நல்லது. காங்கிரஸ் கட்சி அத்தகைய வழியைக் காட்டியிருக்கிறது. மற்றக் கட்சியினரும் அதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று நம்புகிறேன்.

திரு. ம. கமலநாதன் : தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் இந்தச் சமயத்தில், பஞ்சாயத்து ஆக்கப் பணியில் ஈடுபட்டிருக்கும் என் போன்ற பிரிவினை எண்ணம் கொண்டவர்களுக்குச் சில சங்கடங்கள் ஏற்படுவதால் இதிலே அரசியல் புகும் என்று கருது கிறேன். இதுபற்றி அமைச்சரவர்களுடைய கருத்தென்ன?